தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-06
ந.க.எண்:025232/எம்1/இ1/2025 நாள்:17.06.2026

**பொருள்** : பள்ளிக்கல்வி – அரசுப் பள்ளிகளில் பயின்று சாதனை புரிந்த முன்னாள் மாணவர்களை அவர்கள் பயின்ற பள்ளியின் தூதுவர்களாக (School Ambassadors) பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் தேர்ந்தெடுத்தல் – வழிகாட்டுதல்கள் வழங்குதல் – சார்பு.

**பார்வை**
1. 2025-2026 ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை எண். 43 – அறிவிப்பு எண்.11
2. அரசாணை நிலை எண்.112 பள்ளிக் கல்வித்(பக5(1) துறை நாள்.15.05.2025
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்: 025232 /எம்1/இ1/2025,நாள்: 08.08.2025
4. சென்னை, உறுப்பினர் செயலர் , தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள், கடித.ந.க.எண்.245/மா.ப/N1/மு.மா/2025 , நாள்:19.06.2026

*****

பார்வை 3 இல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளில், முதற்கட்டமாக நூறாண்டு கடந்த பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் உட்பட 8209 பள்ளிகளில் பயின்று சாதனை புரிந்த முன்னாள் மாணவர்களை அப்பள்ளியின் தூதுவார்களாக "நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி" இணையதள பக்கத்தில் விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டு, 26,221 முன்னாள் மாணவர்கள் பள்ளித்தூதுவார்களாக செயல்பட விருப்பம் தெரிவித்து பதிவு செய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, மாநில அளவிலான அரசுப்பள்ளி தூதுவர்கள் திட்டத் தொடக்க விழா அசோக் நகர், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 30.01.2026 அன்று தொடங்கிவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பார்வை-3 இல் காணும் செயல்முறைகளின்படி தேர்வு செய்யப்பட்டுள்ள பள்ளிகளில் விண்ணப்பித்த முன்னாள் மாணவர்களை பள்ளித் தூதுவர்களாக தேர்ந்தெடுக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பள்ளிகளில் பள்ளித் தூதுவர்களை தேர்ந்தெடுக்கும் பொறுப்பில் மாவட்ட பொறுப்பு அலுவலராக முதன்மைக் கல்வி அலுவலர் செயல்படுவார். பள்ளித் தூதுவர்கள் தேர்ந்தெடுப்பதை உறுதி செய்தல், வழிகாட்டு நெறிமுறைகளின் படி பள்ளிகளில் தெரிவு நடவடிக்கைகளை கண்காணித்தல், ஒன்றிய அளவிலான பொறுப்பு அலுவலர்களை நியமித்து குறித்த காலத்திற்குள் பள்ளி தூதுவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்திடவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் பள்ளித் தூதுவர்கள் ஜூலை 2026 முதல் ஜூலை 2028 வரை அடுத்த இரண்டு ஆண்டுகள் பள்ளித் தூதுவார்களாக செயல்படுவர். கீழ்காண் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி முன்னாள் மாணவர்களை ஒரு பள்ளியின் பள்ளித் தூதுவார்களாக எண்ணிக்கை வரம்பின்றி தேர்ந்தெடுக்கலாம்.

**பள்ளித் தூதுவர்களை தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்:**

- ஜூலை மாதம் நடைபெற உள்ள பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் பள்ளித் தூதுவர்களை தேர்ந்தெடுப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி தேர்ந்தெடுக்கலாம்.
- தேர்ந்தெடுக்கப்படும் பள்ளித் தூதுவர் தனது தனிப்பட்ட வாழ்க்கையில் முன்னேறி, பணிபுரியும் துறை மற்றும் சமூகத்தின் மாற்றத்திற்காக செயல்படும் முன்னாள்

மாணவராக இருக்க வேண்டும். உதாரணமாக, விளையாட்டு துறையில் தேசிய மற்றும் உலகளவில் நடைபெற்ற போட்டிகளில் பங்கேற்றவர்கள், விண்வெளித் துறை ஆய்வாளர்கள், அறிவியல் ஆய்வாளர்கள், விஞ்ஞானிகள், முதன்மைக் கல்வி நிறுவனங்களின் பேராசிரியர்கள், அரசு அதிகாரிகள், இன்ன பிற

- இவர் சார்ந்த அரசுப் பள்ளியில் பிற பொறுப்புகளில் இருக்கக் கூடாது.
- இளநிலைக் கல்லூரி பயிலும் மாணவர்கள் பள்ளித் தூதுவராக போட்டியிட இயலாது.
- வெளிநாடு வாழ் தமிழர்கள் பள்ளித் தூதுவராக தேர்ந்தெடுக்கப்படலாம்.
- இவர் எவ்வித சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல் வேறுபாடின்றி நடப்பவராக இருக்க வேண்டும்.
- பார்வை–3 இல் காணும் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி **நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி** இணையதள பக்கதில் பள்ளித் தூதுவராக பதிவு செய்த முன்னாள் மாணவர்கள் மட்டுமே போட்டியிட முடியும்.
- விண்ணப்பிக்காத முன்னாள் மாணவர் ஒருவர் பள்ளித் தூதுவராக போட்டியிட நினைத்தால் பார்வை – 3 இல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளை பின்பற்றி நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி இணையதளத்தில் பதிவு செய்த பின்னரே போட்டியிட முடியும்.
- பள்ளித் தூதுவராக விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்த முன்னாள் மாணவர்கள் மீது குற்ற வழக்குகள் பதியப்பட்டிருந்தாலோ, குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டவராக இருந்தாலோ பள்ளித் தூதுவராக போட்டியிட முடியாது.
- பள்ளித் தூதுவராக விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்த முன்னாள் மாணவர்களின் விவரங்கள் பள்ளியின் EMIS பக்கத்தில் உள்ளது.

**<u>பள்ளியின் தலைமை ஆசிரியர் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்:</u>**

- சார்ந்த பள்ளியின் தலைமையாசிரியரே பள்ளித் தூதுவரை தெரிவு செய்யும் அலுவலராக இருப்பார்.
- பள்ளித் தூதுவர் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு வாரத்திற்கு முன்பாக பள்ளித் தூதுவராக விண்ணப்பித்த அனைத்து முன்னாள் மாணவர்கள், பள்ளியின் பிற முன்னாள் மாணவர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், ஆசிரியர்களுக்கு நேரடியாக/ கடிதம்/ குறுஞ்செய்தி/ தொலைபேசி/ மாணவர்கள் வாயிலாக தகவல் அளித்து பள்ளிக்கு அழைப்பு விடுக்கப்பட வேண்டும்.
- பள்ளித்தூதுவரை தேர்வு செய்யும் நாளில் பள்ளித் தூதுவராக விண்ணப்பித்த முன்னாள் மாணவர்கள் அனைவரும் கலந்துகொள்வதை உறுதிசெய்ய வேண்டும்.
- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மற்றும் அனைத்து ஆசிரியர்கள் கலந்துகொள்ள வேண்டும்.
- வருகை புரியும் முன்னாள் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் அமர்வதற்கான போதிய இடவசதி உள்ள அறை மற்றும் போதிய இருக்கைகள் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.
- தூய்மையான குடிநீர் பள்ளி வளாகத்தில் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.
- பள்ளி வளாகத்தில் ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான சுகாதாரமான கழிவறைகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**<u>பள்ளித் தூதுவரை தேர்ந்தெடுத்தல் சார்ந்த வழிகாட்டுதல்கள்:</u>**

- பள்ளித் தூதுவர் பதவியின் முக்கியத்துவம் நோக்கம், பணிகள் மற்றும் கடமைகள் குறித்து தலைமை ஆசிரியர் எடுத்துரைக்க வேண்டும்.

- பள்ளித் தூதுவராக போட்டியிட விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்த முன்னாள் மாணவர்களை ஒருவர் பின் ஒருவராக பொறுப்பாசிரியர் அனைவருக்கும் அறிமுகப்படுத்த வேண்டும்.
- பள்ளித் தூதுவராக போட்டியிடும் முன்னாள் மாணவர்கள் ஒருவர் பின் ஒருவராக பள்ளியின் மேம்பாடு மற்றும் மாணவர்களின் வளர்ச்சி சார்ந்த அவர்களின் திட்டங்கள் மற்றும் அடுத்த 2 ஆண்டுகள் அவர்கள் பள்ளியின் வளர்ச்சிக்காக எடுக்க நினைக்கும் முயற்சி குறித்து ஒவ்வொருவரும் 5 நிமிடங்கள் உரையாற்றிட கால அவகாசம் அளிக்க வேண்டும்.
- கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி முன்னாள் மாணவர்கள், பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் ஆசிரியர்கள் என அனைவரும் ஒருங்கிணைந்து பள்ளித் தூதுவர்களை தேர்ந்தெடுக்கலாம்.
- பள்ளித் தூதுவராக விண்ணப்பித்த முன்னாள் மாணவர் நேரில் வர இயலாத போது இணைய வழியில் (Online) பங்கேற்கலாம்.

**<u>பள்ளித் தூதுவர்கள் பதவியேற்பு :</u>**

- பள்ளித் தூதுவராக தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு இணைப்பில் இணைக்கப்பட்டுள்ள சான்றிதழை அனைவரின் முன்னிலையிலும் வழங்க வேண்டும். நேரில் வர இயலாத பள்ளித் தூதுவர்களுக்கான சான்றிதல் மின்னஞ்சல் (Email) வழியாக அனுப்ப வேண்டும்.
- இணைப்பில் வழங்கப்பட்டுள்ள உறுதிமொழியை தலைமையாசிரியர் வாசிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளித் தூதுவர்கள் அனைவரின் முன்னிலையில் உறுதி ஏற்க வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளித் தூதுவர்களின் எண்ணிக்கை மற்றும் பிற விவரங்களை **பள்ளி மேலாண்மைக் குழு பெற்றோர் செயலியில் (TNSED Parent App) பதிவு செய்ய வேண்டும்.**
- தூதுவர்களுக்கான தொடர்ச்சியான செயல்பாடுகள் மற்றும் பயிற்சிகள் "விழுதுகள் செயலி" வாயிலாக ஒருங்கிணைக்கப்படும்.

**<u>பள்ளித் தூதுவர்கள் கடைபிடிக்க வேண்டியவை :</u>**

அரசுப் பள்ளியின் அனைத்து பங்காளர்களும் ஒருங்கிணைந்து தங்கள் பள்ளி மற்றும் மாணவர்களின் மேம்பாட்டிற்கான பொறுப்பை ஏற்கும்போது பள்ளியின் முழுமையான முன்னேற்றம் சாத்தியமாகும். குறிப்பாக, நிலையான பங்காளர்களான முன்னாள் மாணவர்கள் பள்ளியுடன் இணைந்து செயல்படுதல் அப்பள்ளிக்கு கூடுதல் பலம் சேர்க்கிறது. அதனடிப்படையில்,

- மாணவர் சேர்க்கை, மாணவர் இடைநிற்றலை தவிர்த்தல், மாணவர்களின் உயர்கல்விக்கு வழிகாட்டுதல், விளையாட்டுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டி, சிறார் திரைப்படம் திரையிடுதல் போன்ற செயல்பாடுகளில் பெற்றோர்களுக்கு தெரிவித்து மாணவர்கள் பங்கேற்க ஊக்குவித்தல்.
- அரசுப்பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்களை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு எடுத்துச் செல்லுதல், அரசுப்பள்ளியின் மீது மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்திடவும், அரசுப் பள்ளியை நோக்கி மாணவர் சேர்க்கையை அதிகரிக்கவும் பள்ளித் தூதுவர்கள் (School Ambassador) செயல்படுத்தல் .
- அனைத்து பங்காளர்கள் மற்றும் பள்ளியில் செயல்படும் குழுக்களை ஒருங்கிணைக்கும் நபராகவும், அவர்களை பள்ளி மற்றும் மாணவர்களின் வளர்ச்சி சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபட வைக்கும் நபராகவும் பள்ளித் தூதுவர் செயல்படுவார்.

- பள்ளித் தூதுவர் அப்பள்ளியின் செயல்பாடுகளை, தேவையை, கருத்துகளை அனைவருக்கும் பகிரும் அப்பள்ளியின் முக்கிய பிரதிநிதியாக செயல்படுதல்.
- முன்னாள் மாணவ தூதுவர்கள் அப்பள்ளியின் உட்கட்டமைப்பு மற்றும் பிற தேவைக்காக பெருநிறுவன சமூகப் பொறுப்பு நன்கொடைகள், முன்னாள் மாணவர்கள் நன்கொடைகள் போன்றவற்றை ஒருங்கிணைத்து பள்ளியின் உட்கட்டமைப்பு மற்றும் பிற தேவைகளை பூர்த்தி செய்தல்.
- பள்ளித் தூதுவர் அப்பள்ளியின் மாணவர்களுக்காக அனைத்து வகையான வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.
- தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கு பள்ளித் தூதுவர்கள் கல்வி சார்ந்த செயல்பாடுகளில் உறுதுணையாக இருத்தல்.
- முன்னாள் மானவர்களை தாங்கள் பயின்ற பள்ளியுடன் ஒருங்கிணைக்கும் **"விழுதுகள்"** செயலி மூலம் முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைத்தல், அரசுப் பள்ளிகளின் தேவைகளை அறிதல் மற்றும் அவற்றிற்கு பங்களித்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளலாம்.

இணைப்பு : தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளின் விவரம், அரசு பள்ளித் தூதுவர் சான்றிதழ் மாதிரி , அரசு பள்ளித் தூதுவர் பதவியேற்பு உறுதிமொழி.

இயக்குநர்

சுகா 19.06.26

**பெறுநர்:**

1. முதன்மைக் கல்வி அலுவலர்கள்,அனைத்து மாவட்டங்கள்.
2. மாவட்ட கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி , இடைநிலை) அனைத்து மாவட்டங்கள்(முதன்மைக் கல்வி அலுவலர்கள் வாயிலாக)

**நகல்:**

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–09 (தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது)
2. உறுப்பினர் செயலர்
   மாதிரிப் பள்ளிகள்,
   பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,சென்னை–06.
3. இயக்குநர்
   தொடக்கக் கல்வி இயக்ககம், பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், சென்னை–06

;